**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், நாமக்கல்**

**முன்னிலை:- திரு எஸ்.பிரபா சந்திரன்,பி.எல்.,**

**முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, நாமக்கல்.**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11 ஆம் நாள் புதன்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2057, விசுவாவசு வருடம் தை மாதம் 28 ம் தேதி)**
**I.A.No.10/2024 in O.S.No.280/2021**

(CNR No. TNNM01-003527-2021)

முருகேசன் ...மனுதாரர்/3 ம் பிரதிவாதி

/எதிராக/

தங்கராஜ் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு 11.02.2026 ம் தேதியான இன்று கொண்டு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.E.ராஜகோபாலன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.Ra.இளங்கோ அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்...

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்வதை ஏற்றுக்கொண்டு உத்திரவிட கோரி மனுவானது கட்டளை 8 விதி 9 சி.பி.சி-ன் கீழ் மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்-**

மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கில் வாதியானவர் மனுதாரர் மீதும் இதர பிரதிவாதிகள் மீதும் பாகப்பிரிவினைக்கும், தனி சுவாதினத்திற்கும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறார். மேற்படி வழக்கில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் வழக்கறிஞர் மேற்படி வழக்கு கட்டுகளை படித்து பார்த்தபோதுதான் மேற்படி வழக்கில் ஆவணங்கள் இருந்தும் அதன் விபரங்களை பதிலுரையில் தாக்கல் செய்யாமல் விடுபட்ட விபரம் மனுதாரருக்கு தெரிய வந்து மேற்படி விபரங்கள் குறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி

தவறு வேண்டுமென்று ஏற்பட்ட ஒன்றல்ல. எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் கூடுதல் எதிர்வழக்குரையை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் தற்போது தாக்கல் செய்வதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

**<u>3) எதிர்உரையின் சுருக்கம்-</u>**

மனுதாரர் மனு சட்டப்படிக்கும் சங்கதி படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் உள்ள சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இம்மனுதாரர் இந்த எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்துள்ளார். அதில் சில கேள்விகள் எதிர்உரையில் தாக்கல் செய்யவில்லை. குறுக்கு விசாரணை செய்த பிறகு அதனடிப்படையில் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்வது சட்டப்படிக்கும் சங்கதிபடிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. ஆகவே குறுக்கு விசாரணையின் அடிப்படையில் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்வது சட்டத்திற்கு புறம்பானதாகும். தான் முதலில் தாக்கல் செய்த எதிர்உரையில் கூறாத சங்கதிகளை குறுக்கு விசாரணை அடிப்படையில் பூர்த்தி செய்ய நினைப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஆகவே கூடுதல் எதிர்உரை நிராகரிக்கத்தக்கதாகும். எனவே மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

4) மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

5) **<u>மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதை தீர்மானம் செய்ய வேண்டியுள்ளது.</u>**

**<u>தீர்வு–</u>**

6) மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, அசல் வழக்கில் வாதியானவர் மனுதாரர் மீதும் இதர பிரதிவாதிகள் மீதும் பாகப்பிரிவினைக்கும், தனி சுவாதினத்திற்கும் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருகிறார். மேற்படி வழக்கில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர் வழக்கறிஞர் மேற்படி வழக்கு கட்டுகளை படித்து பார்த்தபோதுதான் மேற்படி வழக்கில் ஆவணங்கள் இருந்தும்

அதன் விபரங்களை பதிலுரையில் தாக்கல் செய்யாமல் விடுபட்ட விபரம் மனுதாரருக்கு தெரிய வந்து மேற்படி விபரங்கள் குறித்து கூடுதல் பதிலுரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. எனவே மனுவை அனுமதித்து கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென வாதிட்டார்.

7) எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் வாதுரையின்போது, குறுக்கு விசாரணை செய்த பிறகு அதனடிப்படையில் கூடுதல் எதிர்உரை தாக்கல் செய்வது சட்டப்படிக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், முதலில் தாக்கல் செய்த எதிர்உரையில் கூறாத சங்கதிகளை குறுக்கு விசாரணை அடிப்படையில் பூர்த்தி செய்ய நினைப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென வாதிட்டார்.

8) அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரத்திற்கும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கின் வாதி வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் 3ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் 1979ம் வருடத்தில் வாதியின் தந்தையார் உயிருடன் இருக்கும்போதே வாதி, 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதிக்கு வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொடுத்துவிட்டதாகவும், அதன்படி சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாகவும், அப்படியிருக்க மீண்டும் பாகப்பிரிவினைக்கு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், அவ்வாறு வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் வாதி குருவிவசாயிக்கான சான்றிதழ பெற்றுள்ளார் என்றும், வாதியின் தாயார் பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றும், மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் வாதி, 1,2 பிரதிவாதிகள் மற்றும் வாரிசுகள் கடந்த 15.3.2019ம் தேதியில் ஏற்படுத்திக்கொண்ட முச்சலிக்கா பத்திரப்படி 3ம் பிரதிவாதியின் தகப்பனார் தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது. கூடுதல் எதிர்வழக்குரையுடன்

15.3.2019 தேதியிட்ட முச்சலிக்கா 9.3.2022 நத்தம் நிலவரி திட்ட தூய அடங்கல் பதிவேடு நகல், 27.9.1993 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவு நகல், 17.2.2024 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள சிறுகுறு விவசாயிகள் சான்றிதழின் கணிணி பதிவிறக்க நகல், 13.7.1992 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் பதிவு நகல் ஆகியவைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) வா.சா.1 ஐ பகுதியாக குறுக்கு விசாரணை செய்துவிட்டு அந்த குறுக்கு விசாரணைக்கு தகுந்தாற்போல் மனுதாரர்/3ம் பிரதிவாதி தற்போது கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. வா.சா.1 ஐ 3ம் பிரதிவாதி தரப்பில் கடந்த 20.9.2024 அன்று பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையில், இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் கண்டுள்ள சங்கதிகளை பொருத்து குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்கப்படவில்லை என்பது மேற்படி குறுக்கு விசாரணையை காண்கின்றபோது தெரிய வருகிறது. அப்படியிருக்க குறுக்கு விசாரணையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தகுந்தவாறு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் முன் வைக்கப்பட்ட வாதம் ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும், கூடுதல் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆவணங்களும் அசல் வழக்கை தீர்மானிக்க அவசியமானது என மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் இருதரப்பினர்களுக்கும் அவர்களது தரப்பு வழக்கை முழுமையாக எடுத்துரைக்க போதிய வாய்ப்பளிக்க வேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனு அனுமதிக்கப்படுவதால் எதிர்மனுதாரரின் வழக்கிற்கு யாதொரு பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது.

10) முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு அவரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11– ஆம் நாளான இன்று அவையறிய பகரப்படுகிறது.

sd/–S.Prabha Chandran

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.**

sd/–S.Prabha Chandran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
நாமக்கல்.